


பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய

# அனந்த சயனப் பெருமாள்

## மகா கும்பாபிஷேக மலர்

சாதாரண-தை

1971



# "அனந்தசயனம்" அமைத்த அந்தணர் பெருமான்

1965 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் ஒரு நாள் இரவு. பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் அர்ச்சகர்களில் ஒருவரான பிரம்ம ஸ்ரீ சுப்பையாக் குருக்கள் பெருமானின் திருப்பணிகளை முடித்துக் கொண்டு அயர்ந்து தூங்குகிறார். தூக்கத்திலும் பெருமானின் நினைவு தான் அப் பிராமணோத்தமருக்கு.

கனவு !

ஸ்ரீ வரதராஜப் பெருமான் நின்ற திருக்கோலத்தில் தோன்றி "......நான் நின்று நின்று கால் நோகின்றேன். எனக்குச் சயனிக்க வழி செய்தாயில்லை; நீ மட்டும் சுகமாகத் தூங்குகிறாயோ?" என்று வினவுகின்றார்.

பதறி எழுந்த சுப்பையாக் குருக்கள் அந்தக் கணத்திலேயே தம் மனத்தில் திடசங்கற்பம் பூணுகின்றார். அன்று எடுத்த கருமத்தை பெருமானின் திருவருளையே துணையாகக் கொண்டு அல்லும் பகலும் அதே சிந்தனையாக நின்றுழைத்து ஐந்தாண்டு கால எல்லையில் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் சுப்பையாக் குருக்களவர்கள்.

பகவானிடத்தில் எல்லையில்லாத பேரன்பும் குழந்தையுள்ளமும் படைத்த சுப்பையாக் குருக்கள், பிரம்மஸ்ரீ சபாபதிக் குருக்கள் - நாகம்மா அம்மையார் தம்பதிகளின் திருப்புதல்வராக இற்றைக்கு சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர். இந்தத் தள்ளாத வயதிலும், சிறு குழந்தைபோன்ற உள்ளம் படைத்தவர். தனியொருவராக பெருமானின் திருவருள் ஒன்றையே துணையாகக் கொண்டு இவர் செய்து மு[illegible]த்துள்ள அனந்த சயனத் திருப்பணி, என்றென்றும் இவர் நினைவாகப் பொன்னாலையம்பதியிலே நிலை கொண்டுள்ளது.

ஸ்ரீராம ஜெயம்








# தக்ஷிண கைலாச புராணத்தில் -

நைமிசாரண்ய வாசிகளாகிய சௌனகர் முதலிய முனிவர்கள் கோமதியாற்றங்கரையில் தீர்க்கசத்திரம் என்னும் யாகமொன்றைச் செய்தனர். அவர்கள் அங்கு வந்திருந்த சூதமாமுனிவரை யாக முடிவில் வணங்கி தங்களால் முன்பு சொல்லப்பட்ட தக்ஷிண கைலாசம் உத்தர கைலாசம் என்பனவற்றுள் தக்ஷிண கைலாசத்தைப் பற்றி அறிய ஆவலுள்ளவர்களாய் உள்ளோம் என்றனர்.

சிவபெருமானிடம் உபதேசம் பெற்ற நந்திதேவர் சனற்குமாரருக்கு உபதேசிக்க சனற்குமார முனிவரிடம் உபதேசம் பெற்றவரும் தனது தந்தையுமாகிய வியாச முனிவரிடம் உபதேசமாகப்பெற்ற தக்ஷிண கைலாச மான்மியத்தை சூதமகாமுனிவர் சௌனகாதி முனிவர்கட்கு அன்புடன் உபதேசித்தார்.

அயோத்தி முதல் துவாரகை ஈறான தக்ஷிண கைலாசமென்னும் எட்டையும் விபரித்துக் கூறிய சூதமகா முனிவர் கர்ம பூமி எனப்படும் குமரிக் கண்டத்தில் விளங்கும் ஆயிரத்தெட்டுச் சிவாலயங்களின் பெருமைகளையும் நூற்றெட்டு விஷ்ணு ஆலயங்களின் பெருமைகளையும் கூறுங்கால் சூதமகாமுனிவர் பொன்னாலைய வரலாற்றையும் கூறியுள்ளார்.

முன்னொரு காலத்தில் வலைஞன் ஒருவன் பொன்னாலையத்துக்கு மேற்கிலிருக்கும் கடலில் வலையை வீசினான். அவ்வலையில் ஓர் ஆமை அகப்பட்டது. வெகு சிரமத்துடன் அவ்வாமையைக் கரைசேர்த்தும் அதைக் கொண்டு செல்ல முடியாதவனாய் அவ்விடத்துக்கு தன் இனத்தவர்களை அழைத்துச் சென்றான். அப்போது அவர்கள் பொன்னொளிவீசும் விமானமொன்றை ஆகாயத்திற் கண்டு அதிசயமுற்றார்கள்.

# பொன்னாலைய வரலாறு

பின் அவ்வாமையைப் பார்த்தபோது கல்லாய் இருத்தலைக் கண்டு பேராச்சரியத்தினால் மோகமுற்றார்கள். எல்லோரும் மேன்மை பொருந்திய ஆமை இலக்குமி பதியே என்று ஐயமின்றி உணர்ந்து விஷ்ணு ஆலயத்தை அவ்விடத்தில் அமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

இவ்வாறான தீர்மானத்துடன் சென்றவர்கள் சிற்பநூல் வல்லுநர்களைக் கொண்டு சிறந்த விஷ்ணு ஆலயமொன்றைக் கட்டி முடித்தனர். பின் திருமால் பிரதிட்டை செய்யும் வைணவ ஆசார்யர்களைக் கொண்டு வைகானச தந்திர விதிப்படி பிரதிட்டை செய்து எழுந்தருளிய பெருமாளுக்கு 'வரதராசப் பெருமாள்' என்று நாமகரணஞ் செய்து வழிபட்டார்கள். பொன்னாலயேசன் கிருபையினால் மகிழ்ந்த அவர்கள் நித்திய நைமித்திக பூசைகளை உண்டாக்கிச் சிறப்பாகச் செய்து வந்தார்கள். அதனால் அவர்கள் பொருட் செல்வம் முதலிய மன எண்ணங்களெல்லாம் கைவரப் பெற்றுச் சுகமாய் வாழ்ந்திருந்தனர். இது சத்தியம்; சத்தியம்; என்று பொன்னாலயத்தைப் பற்றி சூதமகாமுனிவர் கூறினார். இது கேட்ட நைமிசாரண்ய வாசிகள் வியாசருடைய மாணக்கரே! வலைஞனுடைய வலையினால் விஷ்ணு ஏன் கட்டப்பட்டார்? அவ்விதம் கட்டிய வலைஞர் யார்? அங்கு தோன்றிய விமானம் யாருடையது? என்று வினவினர்.

இது கேட்ட முனிவர் மகிழ்ச்சியுடன் அவர்களைப் பார்த்துக் கூறினார்; மறையவர்களே! முன்னொருகாலத்திலே துர்வாச முனிவரிட்ட சாபத்தினால் நீசத்தன்மையடைந்த இந்திரன் சாப விமோசனத்தின் பொருட்டு துர்வாச முனிவரைப் பலவாறாக வணங்கினன். அதுகண்ட துர்வாசர் இந்திரனை நோக்கி "ஈழதேசத்தில் பொன்னாலயம் என்னும் பட்டணத்தில் வலைஞர் குலத்தில் பிறப்பாய், ஜனார்த்தனராகிய வாசுதேவர் ஒரு காலத்தில் கூர்மாவதாரம் செய்வார். உன்னால் வலையினால் அக்கூர்மம் கட்டப்படும். அந்த ஆமையின் அங்கம் தீண்டப்பட்டவுடன் நீ சாபத்தினின்றும் நீங்கப் பெறுவாய்" என்று கூறினார்.

துர்வாசரின் சாபத்தின்படி இந்திரன் வலைஞனாகப் பிறந்தான். ஆமையைத் தீண்டியவுடன் தன் இந்திர வடிவத்தைப் பெற்று ஆகாயத்திற் றோன்றிய விமானத்தை அடைந்தான். ஆகாயத்திற் காணப்பட்ட விமானம் இந்திரனுடையதே. கூர்மாவதாரம் கொண்ட திருமாலானவர் அறிஞனாகிய வலைஞனுக்குத் தன் சொரூபத்தைக் காட்டிக் களிப்போடு ஆசீர்வதித்தார். அவ்வாறு ஆசீர்வதித்த இடத்திலே திருமாலின திருவடிச் சுவடு இருக்கிறது. அவ்விடம் மிகப் பரிசுத்தமானது. (இப்போது அவ்விடம் திருவடிநிலை என வழங்கப்படுகிறது) என்று கூறிய முனிவர் நைமிசவன வாசிகளை நோக்கி இக் கதையினை பக்தி சிரத்தையுடன் கேட்போர் படிப்போர்கட்கு விரும்பிய பேறுகள் கிடைக்கும் என்றும் ஆவணி மாதத்து கிருஷ்ண பட்ச அட்டமிதினத்தில் பொன்னாலய வாசரும், லோகரட்சகரும் ஆய வரதராசப் பெருமாளைத் தரிசனம் செய்து வணங்கினால் அவர்களது பாபங்கள் நீங்கும், இம்மையில் சகல செல்வங்களுடன் வாழ்வர், மறுமையில் வைகுண்ட லோகத்தில் களிப்புற்று வாழ்வார்கள் எனவும் கூறியருளினர்.

சூதமுனிவரால் விதந்தெடுத்துரைக்கப் பெற்ற இத்தலத்துக்கு சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் என்பன தலப் பெயர்களாக உள்ளன. இந்திரன் தொடர்பால் சுவர்ணாலயபுரி என்றும், இலக்குமி பூசித்துப் பயன் பெற்றமையினால் பொன்னாலயம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. அரங்கம் என்பது திருமாலுக்கு உகந்த இடத்தைக் குறிப்பது. ஸ்ரீரங்கம், ஆதிரங்கம் என்னும் தலப் பெயர்கள் மூலம் அறியலாம். சதுரங்கம் என்பதும் விட்டுணுவுக்குப் பிரியமான தலம் என்பதை விளக்கும். (காலத்தின் கொடும்பிடியில் அகப்படும் ஏனைய ஆலயங்கள் முதலியவற்றுக்கு ஏற்படும் இடர்கள் இவ்வாலயத்துக்கு ஏற்பட்டபோதிலும் மீண்டும் மீண்டும் அதே இடத்தில் ஆலயம் அமைந்து அருட் பொலிவுடன் விளங்குவதே இத்தல விசேடங்களில் முதன்மையானது. தற்போது விளங்கும் ஆலய சரித்திரத்தை ஒழுங்கு செய்ய அறிஞர்கள் முன்வர வேண்டுமென வரதராசப் பெருமாளை வணங்குதும்.)



# அறிதுயில்

காணப்படும் இந்த உலகத்திலே உள்ள பிறவிகளுள் மனிதப் பிறவியே மேலானது. விழிப்பாயிருந்து கருமங்களைச் செய்வதும், படுத்துறங்கிக் கனவு காண்பதும் அதையும் மறந்து ஆழ்ந்த உறக்கம் அடைவதும் மனித உடல் எடுத்தவர்கட்கே உரிய அனுபவங்களாம். இவையிற்றை உண்மை நூல்கள் அவஸ்தைகள் என்று கூறும். அவை முறையே, சாக்கிரம், சொப்பனம் சுழுத்தி என்பனவாம். இதற்கு மேலும் துரியம், துரியாதீதம் என இரண்டு அவஸ்தைகள் உண்டு.

விலங்கினம் பட்சியினம் அடைவது சுழுத்தியும் கனவுமாம். அவைகட்கு நமக்குப் போல விழிப்பு (சாக்கிரம்) இல்லை. அமரர் எனப்படும் தேவர்கட்கு நனவு என்று சொல்லப்படும் விழிப்பு என்னும் உணர்ச்சியே உண்டு. அங்ஙனமானால் சயந்தன் கனவு கண்டதாகக் கந்தபுராணம் கூறுவது என்ன? என்று ஒரு கேள்வி எழுகின்றதேயெனின், சாக்கிரம் எனப்படும் நனவின் உட்பிரிவே என்க. நனவின் நனவு, நனவிற் கனவு, நனவிற் சுழுத்தி என்பது போல உட்பிரிவுகள் அமையும். அது ''விலங்கு முதலன பெறுவ சுழுத்தியொடு கனவாம் விண்ணவர்க்கு நனவு நரர்க்கம் மூன்றுமாகும்'' என துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் வேதாந்த சூளாமணியிற் கூறுவதால் அனுமானிக்கலாகும்.

தூக்கம், துயில், நித்திரை, உறக்கம், சுழுத்தி, சயனம், அனந்தல் என்பன ஒரு பொருட் கிளவிகள். துயில் அறிதுயில் என்றும், மூடத்துயில் என்றும் இரண்டு வகைப்படும். நாம் எல்லோரும் அடைவது மூடத்துயில். கருவிகரணங்களோடு கூடாமல் தனித்து இருக்கும் இன்னிலையிலே நமக்கு நமது வியாபக அறிவு விளங்குவதில்லை. எனினும், சுகமாகத் துயின்றேன் என்ற அனுபவம் நமக்கு இருக்கின்றது. இதை நித்திரைச் சுகம் என்று கூறுவர். சிலர் இது போலத்தான் முத்தியின்பம் என எண்ணி மயங்குவர். முத்தியின்பம் இதனின் வேறு.

இனி, அறிதுயிலைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். அறிதுயில், நின்மனச் சுழுத்தி, தூங்காத் துக்கம், ஞானயோகத் துயில் என்பன ஒரு பொருட் கிளவிகள்.

உரையாசிரியர்:
க, கார்த்திகேசு

அறிதுயிலின் போது உள்ளொளியாகிய திருவருள் ஆன்மாவிலே பதிந்து மல மறைப்பை நீக்கி வியாபக அறிவை விளக்க ஆன்மாவானவன் தன்னையும், அருளையும் சிவபரம்பொருளையும் தனக்கு அனன்னியமாகக் கண்டு நிற்பன். இது

''தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலைசொல்வ தெவ்வாறே''

என்ற திருமூலர் திருவாக்கால் உணரலாகும். தூங்காமற்றூங்கிச் சுகம் பெறுவதெக் காலம் என்று பிறரும் கூறுவர்.

நமது காத்தற் கடவுளாகிய ஸ்ரீமன் நாராயணமூர்த்தியை அறிஞர்கள் பலரும் அறிதுயிலமர்ந்தோன், பாற்கடற் றுயின்றோன், சேஷசயனன், அனந்த சயனன், அலைகடற்றுயின்றோன், அரவணைச் செல்வன் என்று பல திருநாமங்களைச் சொல்லித் துதிப்பர். ''யாதும் ஐயுறேல் காண்டி என்றான் அறிதுயிலமர்ந்த பெம்மான்'' என்பது கந்தபுராணம். ஆதலின் ஈண்டு கூறப்பட்ட அறிதுயில் நாராயண மூர்த்திக்கே விசேடமாக உள்ளது. புத்தி தத்துவத்திலே (பாற்கடலிலே) வியாபித்து அறிந்து துயிலும் கண்ணபிரான் கசேந்திராழ்வார் முதலிய பக்த சிரோன்மணிகட்கு அருள் செய்ததே போல இன்னும் யார் யார் பக்தி பண்ணி வேண்டுகிறார்களோ அவ்வவர்கட்கெல்லாம் நேர்ந்த இடுக்கண்களைப் போக்கி அறம் பொருள் இன்பங்களைக் கொடுக்க எதிர்பார்த்துக் கிடக்கிறார். யாமும் அத்தகைய கருணை வள்ளலை வணங்கி வாழ்த்தி வேண்டியவற்றைப் பெற்றுய்வோமாக.



## இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது........

- இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்;
- கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனையும் உனக்குப் அருள் வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால் அவரை ஒருகாலமும் மறவாதே.
- ஈசுரபத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.
- தீவிரமாயேனும் மந்தமாயேனும், தன்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.
- நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.



# ஸ்ரீ ராமாவதாரப் பெருமை

தீயவற்றை விலக்கி நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்று நமக்கு எண்ணமுண்டு. நல்லவை எவை தீயவை எவை என்பதை அறிந்தால்தான் நல்லவற்றைச் செய்யமுடியும். நம் வாழ்வு வளம் பெற ஆன்மா பேரின்பம் பெற நல்லவற்றையே செய்ய வேண்டும். அந்த நல்லவைகளை எடுத்து விளக்குவன புராணம் இதிகாசம் வேதங்கள் தர்மசாஸ்திரங்கள் முதலியவைகள். இவைகளில் கூறியவற்றை தர்மம் என்பார்கள். இதற்கு மாறானவற்றை அதர்மம் என்பார்கள். இவைகளில் பொதிந்துள்ள தர்மங்கள் நிரந்தரமானவை உண்மையானவை, பழமையானவை. சாதாரண மனித அறிவினால் கற்பிக்கப்பட்டவைகள் அன்று. அந்த தர்மங்கள் மனிதனுடைய அறிவை நல்வழிப்படுத்தி சித்தசுத்தியைக் கொடுத்து பொறுமை அடக்கம் முதலிய உயர்ந்த நற்குணங்களை வளரச் செய்து, தூய வாழ்வையளித்து முடிவில் ஜீவனுக்கு முத்தி இன்பத்தையும் அளிக்கின்றன. அந்த தர்ம வழிகளைப் பின்பற்றி மக்கள் வாழ்ந்து வரும்பொழுது பலவித தீய சக்திகள் தோன்றி பல இடையூறுகளைச் செய்கின்றன. அப்பொழுது தனிப்பட்ட ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய தவ வலிமையாலும் நெறி முறைகளாலும் தீய சக்திகளை வென்று தர்ம வழிகளைக் காப்பாற்றி வந்திருக்கின்றனர். சில தீய சக்திகள் தனிப்பட்ட மனிதனுடைய தவவலிமையின் துணைகொண்டு தர்மங்களை அழிக்க முற்படுகின்றன. இதனை அசுரசம்பத் பெற்றவன் என்று கூறுவார்கள். இவனை அழிக்க தனிப்பட்ட மனிதனின் தவவலிமை அறவலிமையால் முடியாது. ஆகவே தெய்வ சம்பத்தைப் பெற்ற ஒரு மனிதனை உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. இறைவனருளால் தெய்வ சம்பத்துடன் தெய்வாம்சம் பொருந்திய ஒருவர் திருஅவதாரம் செய்கின்றார்; தெய்வ சம்பத்தின் துணை கொண்டு தீயசக்திகளை அழித்து நல் அறங்களை தாபித்து புகழைப் பெறுகின்றார். இவ்வாறு தெய்வ சம்பத்துடன் தோன்றிய உத்தமர்களை அவதரித்தார் என்று சிறப்பித்துக் கூறுகின்றோம். புராண இதிகாசங்களில் இந்த உண்மைகளைக் காணலாம். இந்த தெய்வ சம்பத்துடன் தெய்வாம்சம் பெற்று அவதரிக்கும் திவ்ய புருஷனுக்கு ஜாதி மதம் வர்ணம் ஆசிரமம் முதலிய பாகுபாடுகள் கிடையாது. உறவினர் என்ற பாசமும் இருக்க முடியாது. தான் அவதரித்த ஜாதிமத ஆசிரமங்களுக்குரிய தர்மங்களை வழுவாது பின்பற்றி பொது மக்களின் பொது தர்மங்களையும் தனிப்பட்டவரின் சிறந்த தர்மங்களையும் நிலை பெறச் செய்வதே அப்பெரியாரின் முக்கிய குறிக்கோளாகும். இந்த அடிப்படையான தத்துவத்தில் இராமாயணம் என்னும் இதிஹாஸம் அமைந்துள்ளது. இராவணனால் இயற்றப்பட்டு வந்த தீய சக்திகளை அழித்து தண்டகாரண்ய வாசிகளான முனிவர்களிடம் தர்மங்களை நிலைபெறச் செய்து தானும் தன்னுடைய க்ஷத்திரிய தர்மங்களை குற்றமில்லாமல் நடாத்தி பொது தர்மங்களையும் உலகத்தில் நிலைபெறச் செய்தான் தெய்வ சம்பத்தைப் பெற்ற இராமன்.

இராமன் தர்மமே வடிவானவர் என்று ராமாயணம் சிறப்பாகக் கூறுகின்றது. இராமன் கானகம் செல்லப் புறப்படும் பொழுது அன்னை கோசலை தேவியார் ஆசி



மொழி கூறுகின்றார். நீ எந்தத் தர்மத்தை உறுதியுடன் கடைப்பிடித்து வருகின்றாயோ அந்த தர்மம் உன்னைக் காப்பாற்றும் என்று கூறுகின்றார். தர்மம் காப்பவனைத் தர்மம் காப்பாற்றுகின்றது என்ற உண்மையை கோசலை வாயில் வான்மீகி வெளிப்படுத்தியிருக்கின்றார். தீயவர்களை அடக்கி சாதுக்களைக் காக்க வந்த உத்தமர் தீயவரின் ஜாதி மதம் ஆசிரமம் இவைகளைப் பற்றி கருத்தில் கொள்ளார். அங்கே சில பொதுவான கட்டுப்பாடுகளையும் மீறி சாதுக்களின் பரிபாலனமே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தீயவர்களைத் தண்டிக்கின்றார்கள்.

தாடகை ஒரு பெண். பெண்களைக் கொல்லக் கூடாது என்ற கட்டுப்பாட்டை மீறி தீய சக்தியும் உடல் பலமும் பொருந்திய அரக்கி என்ற முறையில் இராமன் அவளைச் சங்கரித்தார். இராவணன் பிர்மாவின் பேரன். பிர்ம குலத்தில் பிறந்தவன். அந்தணரைக் கொல்லலாகாது என்ற கட்டுப்பாட்டை மீறி அவனுடைய கொடுமையிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற இராவண சங்காரத்தைச் செய்தார். விசேஷ தர்மத்தை நடாத்தும் பொழுது பொது தர்மங்களை விட நேரிடினும் அது குற்றமாகாது என்ற தத்துவத்தை விளக்குகின்றது இந்த இராமாயணக் கதை. சிலர் தீய சக்திகளை தன் நலத்திற்காக மட்டிலும் பயன்படுத்தி வாழ்வார்கள். அவதார புருஷர்கள் அப்படிப்பட்டவர்களின் தீய சக்திகளை ஒடுக்கி அவர்களைக் கொல்லாது மானபங்கம் செய்துவிடுவார்கள். உதாரணமாக சூர்ப்பணகை தன் நலம் கருதி சீதை உயிருடன் இருப்பதனால்தான் தன்னை இராமன் விரும்பவில்லை; சீதையை அழித்துவிட்டால் தன்னை இராமன் ஏற்பான் என்று கருத்துக் கொண்டு சீதைக்குத் தீங்கு செய்ய நினைத்தாள். அப்பொழுது அவளுக்கு மானபங்கம் செய்யப்பட்டது. ஆனல் அவளை அழிக்கவில்லை. பரசுராமன் தன் தந்தையைக் கொன்ற கார்த்தவீர்யனை அழித்ததோடு மட்டுமில்லாமல் அரசர் குலத்தையே அழிப்பேன் என்று கங்கணம் பூண்டு தீய சக்தியை உபயோகித்துவந்தார். ஆனல் இராமர் அவருடைய தீய சக்தியை ஒடுக்கி நல்ல வழி காட்டி மன்னித்து அனுப்பினர். கொல்லவில்லை. இதனல் அறியக் கூடியது தீய சக்திகளைப் பயன்படுத்தி தர்மத்தைக் குலைத்து நல்லவர்களின் வாழ்விற்கு இடையூறு செய்கின்றவர்களையும், பொது மக்களின் தர்மங்களுக்கு இடையூறு செய்கின்றவர்களையும் அவதார புருஷர்கள் அழிக்கின்றனர் என்பதாகும்.

ஸ்ரீ ராமன் தன்னுடைய தர்மபரிபாலனத்தைக் கண்டு தான் மட்டிலும் திருப்தியடைந்தால் போதாது என்று உலக மக்களும் அதனை உணர வேண்டும் என்று கருதி சீதையை இரண்டு முறை சோதனைக்குட்படுத்தி தர்மபரிபாலனத்தை உணரச் செய்தார். இராவண சங்காரம் முடிந்த பின் அக்நிப் பிரவேசம் செய்வித்து சீதையை ஏற்றுக் கொண்டார். இரண்டாவது முறையாக சீதையைக் கானகம் அனுப்பி வைத்தார். நீதி பரிபாலனம் செய்கின்றவன் தான் மட்டிலும் நீதி முறையாகப் பரிபாலனம் செய்கின்றேன் என்று உணர்ந்தால் போதாது. மக்களையும் உணரச் செய்ய வேண்டும் என்ற உண்மையை வால்மீகி காட்டியிருக்கின்றார். உத்தம க்ஷத்திரிய குலத்தில் பிறந்த இராமன் தண்டகாரண்ணியத்தில் தர்ம வாழ்வு நடாத்தி வரும் முனிவர்களை வணங்கிப் போற்றி மகிழ்ந்தான். க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்த இராமனை அந்தணர்களும் முனிவர்களும் பூசித்துக் கௌரவித்தனர். இளவரசன் — அயோத்தி மன்னன் என்ற காரணம் கொண்டு பூசித்தாரல்லர். தெய்வசம்பத்து நிறைந்த உத்தமன் என்ற முறையில் ரிஷிகளும் பூசித்து கௌரவித்தனர். எப்பொழுதெல்லாம் உலகத்தில் தீய சக்திகள் ஓங்கி வளர்ந்து தனி மனிதனின் வலிமையால் ஒடுக்க முடியாமற் போகின்றதோ அப்பொழுதெல்லாம் தெய்வ சம்பத்துக்கள் நிறைந்த உத்தம புருஷர்கள் அவதரித்து தீயவற்றை ஒடுக்கி மக்களின் உள்ளத்தில் தெய்வ சம்பத்தை நிலைநாட்டிச் செல்லுகின்றனர். ●

# இவைகளை ஓதி உய்மின்

"அருளாளன்"

மழலைச் சொல் கேட்போர்க்கு இன்பம் தருவது. ஏனென்றால் குழந்தையின் உள்ளம் தூய்மையானது என்பதாலேயே. வார்த்தையால் வெறுத்துக் கூறும்போதும் குழந்தையின் உள்ளம் வெறுப்புணர்ச்சியின் இருப்பிடமாய் இருப்பதில்லை. குழந்தையின் உள்ளத்தூய்மை அதன் சொற்களிலும் செயல்களிலும் நிறைந்திருக்கும். அத்தூய்மை பிறர் மனத்திற்கு இதமாக இருப்பதனாலேயே குழந்தைகளிடம் முன்பு தொடர்பு இல்லாதவர்களும் வேற்றுமை பாராட்டாது ஈடுபடுகிறார்கள். குழந்தைகளின் உள்ளத்துக்கு ஒப்பான தூய உள்ளம் படைத்தவர்கள் அருளாளர்கள்.

அருளாளர்கள் உயிர்களின் நன்மை கருதி அருளிய பாடல்களே திருமுறை திவ்யப் பிரபந்தம் முதலியவைகளில் அமைந்திருக்கின்றன. மழலை என்பது குழந்தையின் தூய உள்ளத்திலிருந்து குறிக்கோளில்லாமல் வெளிப்படுவன. அருளாளர்கள் தூய உள்ளத்துடன் பரமகருணாநிதியாகிய இறைவனின் இயல்புகளை உயிர்களின் நன்மை கருதி அருளிச் செய்வன அருட்பாடல்கள் எனப்படும். பிள்ளையின் தேவைகளைச் சந்தர்ப்பமறிந்து தந்தையிடம் கூறி நிறைவேற்றும் தாயினைப்போல தாயின் சமயோசிதமான வார்த்தைகள் போல விளங்குவன அருட்பாக்கள்.

இப்படியான அருட்பாடல்களே ஆண்டவன் முன்னிலையில் ஓதுதற்குத் தகுதியுடையன. அருளாளர்களின் பரிசுத்தமான, சாந்தமும் பேரானந்தமும் நிரம்பிய, உள்ளத்திலிருந்து தோன்றியமைபற்றி எளிதில் அருளும் இயல்புடைய இறைவன் அப்பாடல்களில் மிக வாரப்பாடாக இருப்பன். உயிர்களின் நன்மை கருதி அருளப்பட்டமையின் அருட்பாடல்கள் எமது குறைகளை முறையீடு செய்வதாகவும் தூய மனத்து அருளாளர்களால் அருளப்பட்டமையின் தூய்மையே வடிவான இறைவனின் இயல்புகளைக் கூறுவனவாகவும் விளங்குகின்றன. ஆதலின் அருட்பாக்கள் எமக்கு குறை நீக்கும் தன்மையையும் இறையின்பப் பேற்றையும் அருள்வதற்கு வல்லன.

திருமாலின் அருள்பெற்று விளங்கியவர்கள் ஆழ்வார்கள் என்று அழைக்கப்படுவர். காத்தற் கடவுளாகிய திருமாலின் பெருங்கருணைத் திறத்தை நினைந்து மகிழ்தலன்றி வேறு செயலற்ற அவ்வாழ்வார்களால் அருளப்பட்டதே திவ்வியப் பிரபந்தம் என்னும் நூல். தேவாரம் முதலிய திருமுறைகள் தம்மை ஓதுவார்க்கு சிவபக்தியை விளைவிப்பதோடு வேண்டிய வேண்டிய பயன்களை அருள்வது போலவே திருவாய்மொழி முதலிய திவ்வியப் பிரபந்தப் பாடல்களும் விஷ்ணு பக்தியை உண்டு பண்ணுவதோடு இம்மை மறுமைப் பயன்களையும் அருளும் என்க. இன்னின்ன பயன் பெறலாம் என்னும் செய்தியை ஒவ்வொரு திருக்கடைக் காப்புச் செய்யுட்களிலும் காணலாம்.

திவ்வியப் பிரபந்த அருட்பாக்களிற் பல "இலக்குமி தங்கும் திருமார்பினையும்

சங்கு சக்கரம் முதலிய தாங்கிய திருக் கரங்களையும் செந்தாமரை மலர்போலும் திருவடிகளையும்'' இவைபோலும் பிற திரு மேனி அழகுகளைக் கூறி அம்மனக்கண்முன் திருமாலை அமைத்துவரும் இயல்புடையன வாக அமைந்துள்ளன. இப்பாடல்கள் எமக் கும் திருமாலுக்கும் இடையில் நல்ல தொடர்பினை ஏற்படுத்த வல்லன. தூணி லும் துரும்பிலும் பாலில் நெய்போல் விளங்கும் பெருமாள் இப்பாடல்களை ஓது பவர்க்கு தயிரில் நெய்போல வெளிப்பட்டு எமது வழிபாட்டை ஏற்கும் வண்ணம் செய்யும்.

நான்முகக் கடவுளை தமது கொப்பூழ் ஆகிய உந்திக் கமலத்திலிருந்து தோற்று வித்து ஆதிமூலமென அழைத்த யானை, பிரகலாதன், அர்ச்சுனன் முதலியோர்க்கு அருள் செய்தவனாக உள்ள திருமாலின் அருட்செயல்களைக் கூறித் துதிப்பதாய் அமைந்துள்ள பாடல்களால் வணங்கின் இதுவரை காலமும், இனிமேலும் திரு மால் எமக்கு அருள் செய்யும் தன்மைகள் தெளிவாகி எமக்குத் திருமாலிடத்து அசைக்க முடியாத பக்தியும் திருமாலின் அருளும் உண்டாகும்.

கிருஷ்ணாவதாரத்தின்போது கம்சன், பூதகி முதலிய பலரைக் கொன்றது, இராமாவதாரத்தில் இராவண சம்காரம் செய்தது முதலிய குறிப்புக்கள் உடைய பாடல்கள் மூலம் வணங்குவார்க்கு நோய், பகை, முதலிய தீவினை நீக்கம் உண்டா கும்.

''போதும் என எண்ணும் அரசனும் போதாது என எண்ணும் அந்தணனும் அழிவர்'' என்பது பழமொழி. ஆழ்வார் கள் அருளிய 4000-ம் பாடல்களில் இந் நூலில் பதிவிக்கப்படும் ஒரு சில பாடல் களைக்கொண்டு திருப்தியுறுது போதா தென எண்ணும் அரசன் சக்கரவர்த்தி யாதல் போல் ஏனைய பாடல்களையும் தேடி ஓதி வணங்கி அருட் பொலிவு பெறுக.

(பாடல்களை 15-ம் பக்கத்தில் காண்க.)

* * * * * * * * * * *

உயிருக்குத் துணை

உடலுக்கு உயிர் துணையாவது போல உயிர்க்குத் துணையாகின் றவன் இறைவன். ஆனால், உயிர் உடலுக்குத் துணையாய் நிற்பது முதலிலும், முடிவிலும் இல்லாமல், இடையில் சிறிது காலத்திற்கே. இறைவன் உயிர்குத் துணையாவதோ, தொடக்கக் காலம், முடிவுக் காலம் என்பன இல்லாமல், என்றென்றும் நிகழ்வது. எனினும் ஒருபுடை ஒற்றுமை நோக்கி, உயிர் உடலுக்குத் துணையாவது, உயிர்க்கு இறைவன் துணையாவதற்கு உவமையாகக் காட்டப்படுகின் றது. உயிர் உடலின் வேறாயினும் வேறாய் நில்லாது உடலே தானாய் நின்று உடலுக்கு வேண்டுவனவற்றைச் செய்கின்றது. அதுபோலவே இறைவனும் உயிரின் வேறாயினும் வேறாய்நில்லாது உயிரே தானாய் நின்று அதற்கு வேண்டுவனவற்றைச் செய்கின்றான்.

— 'ஞானசம் பந்தம்'

* * * * * * * * * * * *

# அனந்த சயனன் வழிபாடு



நியாயசிரோன்மணி
கி. சுப்பிரமணியசாஸ்திரிகள்

காலா காலத்தில் காத்தல் தொழிலை தவறாது நடத்துபவரே பெருமாளாவார். அவ்வப்போது யுகதர்மத்துக்கேற்ப தீமைகளை அகற்ற தச அவதாரம் எடுத்து உலகைக் காத்த வரலாறுகள் விஷ்ணு புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

‘‘மாஸானாம் மார்கசீர்ஷோஸ்மி’’ என்று கீதையில் கூறியபடியினால் மாதங்களில் மார்கழியும் அதனுள் ஏகாதசித்திதியும் சனி வாரமும் பெருமாளை வழிபட மிகவும் முக்கியமானவைகளாகும். மாதங்கள் திதிகள் எல்லாமே உருவமுள்ளவைகள் என்று தத்வ நிதி விளக்குகின்றது. இடபத்தில் ஏறிக் கொண்டு சூலத்தைக் கையில் வைத்திருக்கும் வெண்ணிறமுள்ள ஓர் உருவமாக மார்கழி மாதம் கூறப்பட்டுள்ளது: இம்மாதத்தில் சுக்கில பக்ஷத்தில் வரக்கூடிய ஏகாதசித் திதியானது மானில் ஏறி அமர்ந்து கொண்டு நீல நிறமுள்ள ஓர் உருவமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த ஏகாதசி உத்தான ஏகாதசி எனப்படும். ஆடி மாத சுக்கில பக்ஷ ஏகாதசி சயன ஏகாதசி எனக் கூறப்படும்.

தேவர்களுக்கு தக்ஷிணாயனம் இராக் காலமாகவும் உத்தராயணம் பகற் காலமாகவும் அமைவதால் தேவர்களின் விடியற்காலை வேளையாக மார்கழி மாதம் அமைந்துள்ளது. ஆடி மாதம் சுக்கில பக்ஷ சயன ஏகாதசியில் யோக நித்திரை கொண்டு உலகைக் காக்கும் விஷ்ணுவானவர் மார்கழிமாத சுக்கில பக்ஷ உத்தான ஏகாதசியில் துயிலினின்றும் விழித்து உலகை ரக்ஷிக்கின்றார். பிறவியெடுத்தோருக்குத் தேவையான தர்ம அர்த்த காம மோக்ஷம் ஆகிய நான்கு பொருட்களையும் கொடுப்பதற்காகவே அவருக்கு நான்கு கைகள் அமைந்துள்ளன எனப் புலவனொருவன் கூறுகிறான்.

எந்த தேவதைகளையும் ஐந்து ஆசனங்களைக் கொடுத்து பூஜிக்கின்றனர். அவைகளுள் முதலாவது ஆசனம் அனந்தாசனமாகும். அனந்தாசனம் என்பது பாம்புப் படுக்கையாகும். நூற்றெட்டு விஷ்ணு க்ஷேத்திரங்களிலே இநபது இடங்களில் விஷ்ணு சயனித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அவைகளுள் இரண்டு இடங்கள் தெற்கு நோக்கியும் ஓரிடத்தில் மேற்கு நோக்கியும் ஏனைய இடங்களில் கிழக்கு நோக்கியும் சயனித்திருக்கிறான். இவ்வாறு பள்ளி கொண்டிருக்கும் இவனை அனந்த சயனன், புஜக சயனன், சேஷ சயனன், புஜங்க சயனன் என்று பலவிதமாக அழைக்கின்றனர்.

சனிக்கிழமையும் ஏகாதசி திதியும் விஷ்ணு வழிபாட்டுக்கு உகந்த நாட்களாகும். லக்ஷ்மியுடன் வைகுண்டத்திலிருந்து பூலோகத்திற்கு வந்து காட்சி கொடுத்த தினமாகையால் அந்நாள் லக்ஷ்மி நாராயணனை வழிபடுவதற்குச் சிறந்த நாளாகும். தூக்கமே வளர்ச்சிக்கு மிக முக்கியமான காரணமாகையால் யோக நித்திரையினால் தன் வயிற்றுக்குள் இருக்கும் அண்ட சராசரங்களையெல்லாம் வளரச் செய்து இரட்சிக்கிறான்.

ஒவ்வொருவனும் தன் தன் பிறப்பையும் இறப்பையும் அறிய முடியாதவனாக இருக்கின்றான். ஸ்திதியில் (காத்தலில்) ஒவ்வொருவநும் என்னென்ன செய்கின்றோம் என்பதை அறிகின்றோம். தீமையை விலக்கி நன்மையைச் செய்யத் தலைப்படுகிறோம். ஆகவே ரக்ஷக மூர்த்தியாக விளங்கும் நீல நிறமுள்ள சேஷப் படுக்கையில் படுத்திருக்கின்ற அனந்த சயனனை வழிபடுவதோடு சனி ஏகாதசி முதலிய அவரது வழிபாட்டுக்குரிய விசேஷ நாட்களில் அவரை வழிபட்டு பிறவி பெற்ற நாமெல்லோரும் இகபர சுகங்களை அடைவோமாக!

# பள்ளிகொள்ளும் பரந்தாமன்

அன்றொருநாள்; பாண்டவர் பன்னிரண்டு வருட வனவாசம் செய்யும் காலம். தினமும் திரௌபதை உணவு உண்ணும் வரையும் வேண்டிய உணவு வகைகளையெலாம் சுரக்கும் அமுதசுரபி ஒன்று தெய்வ கருணையால் அவர்கட்குக் கிடைத்தது. விருந்தினரை பேணி வனவாசம் செய்யும் அவர்கட்கு ஒருநாள் ஒரு பேரிடர் வந்தது. துரியோதனன் தன் அரண்மனையில் விருந்து பெற்ற துர்வாச முனிவரையும் சீடர்களையும் பாண்டவர்களிடமும் விருந்து உண்ணும்படி அனுப்பியிருந்தான்; அன்று துர்வாசர் காலம் தாழ்த்தி வந்தபடியால் திரௌபதை உணவருந்திவிட்டாள். உணவுக்கு வருவதாக அறிவித்துவிட்டு நீராடச் சென்ற முனிவர்க்கும் சீடர்க்கும் உணவு படைக்கும் வகையில்லை. முனிவர் இப்படியான சமயத்தில் சாபமிடவேண்டுமென்பதே துரியோதனனின் ஆசை. ஆனால்; அவ்வாபத்திலிருந்து காக்கும்படி கிருஷ்ணனை நாடினள் திரௌபதை. கிருஷ்ணன் பசிக்கிறது என்றவாறே அவர்களிடம் வந்து திரௌபதை கையலம்பிய இடத்தில் கிடைத்த ஒரு பருக்கை சோற்றையும் கீரைத் துண்டொன்றையும் எடுத்து "எல்லா சீவராசிகளின் வயிறும் நிரம்பட்டும்" என்று கூறி உண்டான். நீராடச் சென்ற துர்வாசர் மீண்டு வந்து தான் உணவு உண்ண முடியாதிருப்பதாகக் கூறி பாண்டவர்களை ஆசிர்வதித்துச் சென்றார்.

கிருஷ்ணாவதாரியாகிய நாராயண மூர்த்தி துர்வாசரது சாபத்தினின்று பாண்டவர்களை காப்பாற்றியதுபோலவே எமது பொன்னாலையில் எழுந்தருளியிருந்து அனைவர்க்கும் அபயம் வழங்குகிறார். தன்னை வந்தடைந்தவர்கட்குத் தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும் விளங்கும் பெருமான் இன்றுவரை அருளியது போன்று இரண்டு மூன்று மடங்கு கருணை பொழியத் திருவுளம் பற்றினாரோ, அல்லது உலகிற்குத் தம் கருணை அதிகம் தேவை என்று திருவுளம்பற்றினாரோ, அல்லது ராமபிரானின் குல முதல்வர்கள் வைகுந்தத்தில் பெற்றுப் பூசித்த குல தெய்வத்தைக் கடைசித் தம்பியாகிய விபீஷணனுக்கு வழங்க அவன் இலங்கைக்குக் கொணர்ந்த போது தேவர்கள் விருப்பப்படி ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்து இலங்கை நோக்கும் பாற்கடலில் பள்ளி கொள்ளும் கோலத்தைப் பொன்னாலையம் பதியிலும் அடியார்கட்குத் தரிசிப்பிக்கத் திருவுளம்பற்றியே இக் கும்பாபிஷேகம் நிகழ்கின்றது என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஏனெனில்;

இக்கோவிலில் மிக மகிமை பொருந்திய இரு தேர்த் திருவிழாக்களுள் முதன்மையானது மார்கழி வைகுண்ட ஏகாதசியில் சுவாமி ரதாரோகணம் செய்யும் திருவிழாவாம். 1965-ம் ௵ மார்கழி ஏகாதசி விசேட பூஜை நடைபெறும் புனித வேளையில் பிரம்ம ஸ்ரீ சுப்பையாக் குருக்களின் கனவில் தோன்றி "நான் உறங்குதற்கு (அறிதுயில் கொள்ளுதற்கு) இங்கு இடமில்லாதிருக்க நீ உறங்குகின்றாயோ என்று கூறித் துயிலுணர்த்தியதும், பிரம்ம ஸ்ரீ சுப்பையாக் குருக்கள் இது சம்பந்தமான காரியங்கள் செய்யும் போது வரும் இடையூறுகளை நீக்கித் தோன்றாத் துணையாய் இக் கும்பாபிஷேகத்தை நிறைவேற்றுவதுமான கிருஷ்ண லீலை எம்போல்வரால் உணர்தற்கரியது.

பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமன் பிரமதேவனைப் படைத்தருளியும் பிரமதேவனால் தோற்றுவிக்கப்பட்ட சகல உலகங்களையும் காத்தருள் புரிவதுபோல பிரம்ம ஸ்ரீ சுப்பையாக் குருக்கள் வாயிலாகவும் ஏனைய அடியார்கள் வாயிலாகவும் இக்கும்பாபிஷேகம் வரையுள்ள பல காரியங்களை நடாத்தியருளி இங்கெழுந்தருள்வது எல்லோர்க்கும் நல்ல காலம்; ●

பண்டிதர், தி. பொன்னம்பலவாணர்

# பொன்னாலையத்தில்

ஒரு

# திருவரங்கம்

வித்துவான்
கே. முருகேசன்
காரைநகர்.

கடந்த புரட்டாதித் திங்கள் இறுதிச் சனிக்கிழமை சனியேஸ்வரனுக்கு எள்ளெண்ணெய் எரிக்க அயலே உள்ள பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயத்துக்குச் சென்றேன். காரைநகரிலிருந்து ஆண்கள் பெண்கள் பிள்ளைகள் பலர் நடந்து செல்வதைக் கண்டு நானும் கால்நடையாகவே சென்றேன். மக்கள் கூட்டம் பாதையின் இரு மருங்கும் கொடிவிட்டுச் சென்று கொண்டிருந்தது. கோயிலை அண்மியதும் மக்கள் திரண்டிருந்தனர். கை கால் கழுவி விட்டு கோயிலுட் சென்றேன். முகப்பின் இரு புறமும் உள்ள உண்டியற் பெட்டியருகில் ஒவ்வொருவரும் நின்று எள்ளெண்ணெய் எரிப்பதற்கும் அர்ச்சனை செய்வதற்கும் பணம் கொடுத்துச் சீட்டுக்கள் பெறுவதைக் கண்டு நானும் அவ்விதமே சீட்டைப் பெற்றுக் கொண்டு உட்பிரவேசித்தேன்.

அங்கே ஓங்கி உலகளந்த உத்தமனின் அலங்காரத் தோற்றம் கண்டு வணங்கிக் கொண்டு உட்பிரகாரத்தை வலமாக வந்தேன். மக்கள் கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டனர். நான் தெற்கு வீதி எல்லை வரை சென்று மேற்கு வீதிப் பக்கம் திரும்பியதும் அவ்வீதி எங்கணும் அளவிட முடியாத எள்ளெண்ணெய்ச் சட்டிகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அக்காட்சி என் மனதை உருக்கியது. வடமேற்கு மூலையில் தெற்கு நோக்கி எழுந்தருளியிருந்த சனி பகவானுக்கு பக்தர்கள் ஏற்றிவைத்த விளக்குகள்; சூரிய பகவானுடைய வெப்பம் தாங்காது பூமியில் விழுந்து ஒளிவிடும் நட்சத்திரங்களோ என எண்ணும்படியாகக் காட்சியளித்தன. அடியேனும் கொண்டு சென்ற எள்ளெண்ணெய்ச் சட்டியினை எரித்துவிட்டு அர்ச்சனையும் செய்து வலமாக வந்தேன்.

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றுவான் நம்மையுடைய நாராயணனை "செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே, நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல், அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும் படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே" எனப் பாடி வணங்கிக் கொண்டு திரும்பும்போது புதிதாக அமைத்த கொடித்தம்பத்தைக் கூர்ந்து நோக்கினேன். மிக்க வேலைப்பாடுடைய இதனையெல்லாம் அமைத்தவர்கள் இறைவனின் அனந்தசயனக் கோலத்தை அமைக்காது விட்டனரே என நினைந்தவாறு திரும்பினேன்; ஒரு மரப்பெட்டியுள் புதிய அனந்தசயனக் கோலம் இருக்கக் கண்டு அதனைப் பார்த்தேன். மிக அழகாக இருந்தது. அயலே நின்றவரிடம் இது யார் செய்தது எனக் கேட்டேன்.

அவர்கள் கதை சொல்ல ஆரம்பித்தார். ஐயா! "பிரம்மஸ்ரீ சுப்பையாக் குருக்களுக்கு கனவில் ஏகாதசி அன்று தோன்றி தன் திரு உருவத் திருமேனியைத் தாபிக்குமாறு திருவருள் புரிந்தார் பெருமான். அதன் பிறகு குருக்களவர்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து அடியார்களிடம் பொருள் திரட்டி தாய் நாட்டில் இருந்து வந்து மாவிட்டபுரத்தில் தங்கி இருந்த சிற்பக் கலை நிபுணர் பெரியசாமி ஸ்தபதியாரிடம் சென்று இதனை அமைத்துத் தரச் செய்தார்கள். அவர்களின், கைத்திறன் அனைத்தும் இவ்வனந்த சயனத் திருக்கோலத்தில் பிரதிபலிக்கின்றது" என்றார். இவ்வாறு கூறக் கேட்டபோது சிறீரங்கத்தில் பள்ளி கொள்ளும் திருக் கோலம் எனக்கு ஞாபகம் வந்தது இரண்டினையும் ஒப்ப நோக்கினேன். நாராயணன் பாற்கடலிலே ஆதிசேடன் மேல் பள்ளி கொள்ளும் கோலம் திருவரங்கத்தில் சுமார் இரு

(மறுபக்கம் பார்க்க)

# அறிதுயிலின் காரணம்

ஒரு சிறு சம்பவம், சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையில். அவர் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் பொழுது நடந்தது. அது ஒரு பெரிய உண்மையையே விளக்குகின்றது. விவேகானந்தர் என்னும் நரேந்திரன் பத்துப் பன்னிரண்டு வயதில் ஒரு சிறு பள்ளியில் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் வகுப்பில் உபாத்தியாயர் பூகோளப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். நரேந்திரன் அப்பொழுது கண்களை மூடி தியானத்தில் இருப்பவன்போல் இருந்தான். இதை உபாத்தியாயர் பார்த்துவிட்டார். "அடே! பாடம் நடக்கும்போது தூங்கவா செய்கிறாய்? என்று சொல்லிப் பையன் நரேந்திரனைக் கோபித்துப் பிரம்பால் இரண்டு அடியும் கொடுத்துவிட்டார். பாடம் முடியும் தறுவாயில் உபாத்தியாயர் பையன்களிடம் கேள்விகள் கேட்டார். விழித்த கண் விழித்தபடியே இருந்து பாடங்கேட்ட பையன்கள் எல்லாம் கேள்விக்கு விடை சொல்லக்கூடாமல் "திறு, திறு" என்று விழித்தார்கள். நரேந்திரனிடம் கேள்விகள் கேட்டபோது அவன் ஒவ்வொரு கேள்விக்கும் "டக், டக்" என்று பதில் சொன்னான். ஐயோ! இந்தப் பையன் பாடங்கேட்கும்போது தூங்குகிறான் என்று அடித்துவிட்டோமே என்று வருந்தினார் உபாத்தியாயர். உபாத்தியாயருக்கு அன்று ஒரு பெரிய உண்மை விளங்கிற்று. மனத்தை ஒரு நிலைப்படுத்திப் பிறர் சொல்லும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளக் கண்களை அகல விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தால்மட்டும் போதாது. கண்களை மூடி, அறிவைச் செலுத்தி கூர்மையாக விஷயங்களைக் கிரகித்தல் வேண்டும் என்று அறிந்தார். நரேந்திரர் பின்னர் எவ்வளவு கூர்ந்த மதியுடையவனாக வளர்ந்தார் என்றும், அரியதத்துவங்களையெல்லாம் உலக மக்களுக்கு எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்று, விவேகானந்தர் என்னும் பெயருக்கு ஏற்ப விளங்கினார் என்பதும் நாம் அறிந்ததே.

இந்தச் சம்பவம் ஒரு பெரிய தத்துவத்தையே விளக்குகிறது எனக்கு. "பாற்கடலிலே பரந்தாமன் படுத்துக் கிடக்கிறான்; அரவணையில் அறிதுயில் கொள்ளுகிறான்; என்றெல்லாம் காத்தற்கடவுளான விஷ்ணுவைக் கலைஞர்கள் கற்பனை பண்ணியிருக்கிறார்களே, அது சரிதானா?" என்று எண்ணினேன் நான். எண்ணிறந்த ஜீவராசிகளையெல்லாம் காத்தளிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள பரந்தாமன், சும்மா கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டிருந்தால் காரியம் உருப்படுமா என்ன? ஆதலால் கண்களை மூடி அறிதுயிலில் அமர்ந்து மக்களுக்குச் செய்த காரியங்களெல்லாம் என்ன என்ன என்று அறிவதிலே தன் முழுக் கவனத்தையும் செலுத்திக்கொண்டிருக்கிறான். இப்போது விளங்குகிறது அரவணையிற் கிடந்து ஏன் அறிதுயில் கொள்ளுகிறான் என்று! இவனையே "குன்றினில் நின்று வானில் இருந்து நீள்கடல் கிடந்த ஆதிதேவன்" என்று திருமழிசையாழ்வார் பாடுகிறார்.

(வட வேங்கடம் முதல் குமரி வரை என்ற நூலிலே பிரபல தல யாத்திரை எழுத்தாளர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் இவ்வாறு கூறிச் செல்கிறார்.)

—சு. சண்முகரத்தினம்

---

(முன்பக்கத்தொடர்ச்சி.....)

பத்திரண்டு அடி இருக்கும். ஆனால் இவ்வுருவம் அதன் $\frac{1}{5}$ இருக்கலாம். திருவரங்கப் பெருமானுக்கு தங்கக் கவசம் உண்டு. ஆனால் பொன்னாலையில் பள்ளி கொள்வோனுக்குப் பொன் தேவையில்லை. திருவரங்கத்தானிடம் காணப்படாத மற்றொரு சிறப்பு பொன்னாலையானிடம் அமைந்திருக்கக் கண்டேன். அதாவது திருமாலின் நாபிக் கமலத்தில் இருந்து பிரமன் தோன்றிய ஐதிகம் இங்கு உள்ள திருவுருவில் தான் அமைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வித சிறப்புக்களுடன் அமைந்த பொன்னாலை வரதராசப் பெருமானின் அனந்த சயன நூதன பிரதிஷ்டை தைத் திங்கள் 18-ம் நாள் என்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி கொண்டேன். கும்பாபிஷேகம் இனிது நிறைவேறி எல்லோருக்கும் இன்பமுண்டாக வேண்டும் என்று இறை அருளை நாடுவோம்.

# பொன்னாலை வரகவி பே. க. கிருஷ்ணபிள்ளை அவர்கள் வரதராசப் பெருமாள் மீது பாடியன

இராகம் : நீலாம்பரி தாளம் : ஆதி

1

பல்லவி

வந்தாளாய் வரதா வசுதேவனருள்சுதா
வந்தாளாய் வரதா

அனுபல்லவி

நந்த கோபன் மைந்தா அனந்தா
வசனுஹரி வசிஹரஹரி வஞ்சமோங்கி
வருநாரி சங்காரி பொன்னாலைய

முடுகு

வாரிதியினிற்சனிபவ கனிவா
யமச்சவதார வரஹண
வருரவி குல திலகென வருமுரஹரி
வலியவிதுர நேயா வாமதேவ
துளசிமாமலரணி அழகியு களவுணி
தயிரொடு உறி வெண்ணெயினை உணி புவியினை
வருபவ பவனி ருக்குமணி நந்நடிக்குமணி தளுக்குமணி
சியாமளனி (வந்தாளாய் வரதா)

சரணம்

வெங் கடாசல மிலங்கு மதுரநிதியே
வெகுலாச மிகுன்னத
சிங்க முகனே பிரஹலாத நந் தேவதையே
சங்கு சக்கர ஜனகாங் கனியாள் துதி
மங் கலா பவ நசாமிர்த்தபூபதி (முந்திய முடுகினைப் பாடி
முடிக்கவும்)

இராகம் : கேதாரகௌளம் ஆ ஸரிம ப நிஸ் அ ஸ்நிதபமகரிஸ } 28 ன் ஜன்யம்

தாளம் : ரூபகம்

2

பல்லவி

துணைநீ ஆதரி பொன்னாலை
துவாரகாபுரி வாசனே கேசவா (துணைநீ ஆதரி)

அனுபல்லவி

வினைமிகுந்து வாடி நொந்தேன்
வேதனே வினோதனே சுபோதநந் நீதனே (துணைநீ ஆதரி)

சரணம்

மனைவியொடு மக்கள் சந்தையின் கூட்டம்
மாதவனே நீ தந்திட்டஎன் தேட்டம்
பிணிஅணுகாது பாதுகார் மன்றாட்டம்
பிஞ்சிலிருந்து வளர்ந்து விளைந்து முதிர்ந்தெனை (துணைநீ ஆதரி)

# மாயன் பெருமை 1

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

மாயன் பெருமை சொல்ல வல்லவர் யாரோ
மாதுமை சோதரன் மாதவ ஸ்ரீதரன் — மாயன்

அனுபல்லவி

ஆயிரம் நாவுள்ள ஆதிசேடனும் சொல்ல
அஞ்சுவனேல் அருள்சேர் விஞ்சை பலபுரிந்த மாயன்

சரணம்

ஆய உலகமெல்லாம் அடக்கி உதரம்தன்னில்
தாயென காப்பவன் தாரணியோர் காண
தூய "சதுரங்க"மென்னும் தொல்பதி "பொன்னுலை"தன்னில்
தோன்றி அரவணைமேல் துயில்புரி காட்சிதந்த — மாயன்

## 2

ராகம்: கேதாரகௌளம் தாளம்: ஆதி

பல்லவி

அனந்தசயனத் திருக் கோலம் தனைக்கண்டு
அடிபணிவார்க் கில்லை வினையே ஐயன் — அனந்த

அனுபல்லவி

மனந்தனில் தூய்மை கொண்டு வணங்குவார்க் கருளவென்று
கனிந்த முறுவலுடன் காட்சி தரும் மாயன் — அனந்த

சரணம்

கரங்களில் சுடராழி சங்கமும் திருநாபி
கமலந்தனில் வேதன் அமர்ந்திட உடனுகி
அணங்கினர் திருமாதும் அவனியும் அடிவருட
அரங்கன் "பொன்னுலை"தனில் அறிதுயில் கொள்ளுமிந்த — அனந்த

- "நாராயணதாசன்"

ஸ்ரீ ராம ஜெயம்

## நம்மாழ்வார் அருளிச் செய்த



# திருவாய் மொழி

உயர்வற வுயர்நல முடையவன் எவனவன்
மயர்வற மதிநல மருளினன் எவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே.

திருவுடம்பு வான்சுடர் செந் தாமரைக்ண் கைகமலம்
திருவிடமே மார்வ மயனிடமே கொப்பூழ்
ஒரு விடமு மெந்தை பெருமாற் கரனேயோ
ஒருவிடமொன் றின்றியென் னுள்கலந் தானுக்கே.

கண்ணனை மாயன் றன்னைக் கடல்கடைந் தமுதங் கொண்ட
அண்ணலை அச்சு தன்னை யனந்தனை அனந்தன் றன்மேல்
நண்ணிநன் குறைகின் றானை ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
எண்ணுமா றறிய மாட்டேன் யாவையும் எவருந் தானே.

ஒளி மணி வண்ண னென்கோ? வொருவனென் றேத்த நின்ற
நளிர் மதிச் சடைய னென்கோ? நான்முகக் கடவு ளென்கோ?
அளிமகிழ்ந் துலக மெல்லாம் படைத்தவை யேத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான் கண்ணனை மாயனையே.

கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப்புரம் புக்க வாறும் கலந்த சுரரை
உள்ளம் பேதஞ்செய் திட்டுயி ருண்ட வுபாயங்களும்
வெள்ள நீர்ச்சடை யானும் நின்னிடை வேற லாமை விளங்க நின்றதும்
உள்ள முன் குடைந்தென் னுயிரை யுருக்கி யுண்ணுமே

அண்ணல் மாய னணிகொள் செந்தாமரைக்
கண்ணன் செங்கனி வாய்க்கரு மாணிக்கம்
தெண்ணி றைச்சுனை நீர்த்திரு வேங்கடத்து
எண்ணில் தொல்புகழ் வானவ ரீசனே.

ஸ்ரீ ராம ஜெயம்

## பெரியாழ்வார் அருளிச் செய்த

# திருப்பல்லாண்டு

அடியோ மோடும்நின் னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்குமப் பாஞ்சசன் னியமும் பல்லாண்டே.

எந்தைதந் தைதந்தை தந்தைதம் மூத்தப்ப னேழ்படி கால் தொடங்கி
வந்து வழிவழி யாட்செய்கின் றோம் திருவோணத் திருவிழவி
லந்தியம் போதி லரியுரு வாகி யரியை யழித்தவனை
பந்தனை தீரப்பல் லாண்டுபல் லாயிரத் தாண்டென்று பாடுதுமே.

தீயிற் பொலிகின்ற செஞ்சுட ராழி திகழ் திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே யொற்றுண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை யாயிரந் தோளும் பொழி குருதி
பாய சுழற்றிய ஆழிவல் லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை யுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன சூடுமித் தொண்டர்களோம்
விடுத்த திசைக்கரு மம்திருத் தித்திரு வோணத் திருவிழவில்
படுத்தபைந் நாகணைப் பள்ளிகொண் டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

எந்நா ளெம்பெரு மானுன் றனக்கடி யோமென்றெழுத்துப்பட்ட
அந்நாளே அடியோங்க ளடிக்குடில் வீடுபெற் றுய்ந்தது காண்
செந்நாள் தோற்றித் திருமதுரையுள் சிலை குனித்து ஐந்தலைய
பைந்நா கத்தலைப் பாய்ந்தவ னே உன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

ஸ்ரீ ராம ஜெயம்

# திரு மொழி

இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி
    யினத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி யனந்த னென்னும்
    அணிவிளக்கு முயர்வெள்ளை யணையை மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
    திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
    கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கும் நாளே.

மாவினைவாய் பிளந்துகந்த மாலை வேலை
    வண்ணனைஎன் கண்ணனை வன் குன்ற மேந்தி
ஆவினையன் றுயக்கொண்ட வாய ரேற்றை
    அமரர்கள்தந் தலைவனையந் தமிழி னின்பப்
பாவினையவ் வடமொழியைப் பற்றற் றார்கள்
    பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
கோவினைநா வுறவழுத்தி யென்றன் கைகள்
    கொய்ம்மலர்தூ யென்றுகொலோ கூப்பு நாளே.

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறா
    யுலகுய்ய நின்றானை அன்று பேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக் கன்று மேய்த்து
    விளையாட வல்லானை வரைம கானில்
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்
    தவநெறிக்கோர் பெருநெறியை வையங் காக்கும்
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டு கொண்டேன்
    கடிபொழில்சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே.

திருமடந்தை மண்மடந்தை யிருபாலுந் திகழத்
    தீவினைகள் போயகல வடியவர்கட் கென்றும்
அருள்நடந்து இவ்வேழுலகத் தவர்பணிய வானோர்
    அமர்ந்தேத்த விருந்தவிடப் பெரும்புகழ்வே தியர்வாழ்
தருமிடங்கள் மலர்கள் மிகு கைதைகள்செங் கழுநீர்
    தாமரைகள் தடங்கடொறு மிடங்கடொறும் திகழ
அருவிடங்கள் பொழில்தழுவி யெழில்திகழ நாங்கூர்
    அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே.

பண்டைநான் மறையும் வேள்வியும் கேள்விப்
    பதங்களும் பதங்களின் பொருளும்
பிண்டமாய் விரிந்த பிறங்கொளி யனலும்
    பெருகிய புனலொடு நிலனும்
கொண்டல்மா ருதமும் குரைகட லேழு
    மேழுமா மலைகளும் விசும்பும்
அண்டமுந் தானாய் நின்றவெம் பெருமா
    னரங்கமா நகரமர்ந் தானே.

நீரகத்தாய் நெடுவரையி னுச்சிமேலாய்
நிலாத்திங்கள் துண்டத்தாய் நிறைந்த கச்சி
ஊரகத்தாய் ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய்
உள்ளுவா ருள்ளத்தாய் உலக மேத்தும்
காரகத்தாய் கார்வானத் துள்ளாய் கள்வா
காமருபூம் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய் பேராதென் நெஞ்சி னுள்ளாய்
பெருமான் உன்திருவடியே பேணினேனே

## புராணம்

காயும் வெண் பிறைநிகர் கடுவொடுங் கெயிற்
றாயிரம் பணமுடி யனந்தன் மீமிசை
மேயநான் மறைதொழ விழித்து றங்கிய
மாயன்மா மலரடி வணங்கி யேத்துவாம்.

நாராய ணாய நமவென்னு நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராரு மேனிக் கருணா கரமூர்த்திக்
காராத வீனயென் னறியாமை யொன்றுமே.

பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை
போக்கி நிற்கிது பொருளென வுணர்கிலென் புவனம்
ஆக்கி மற்றவை யகிலமு மணிவயிற் றடக்கிக்
காக்கு நீயொரு வேள்விகாத் தலையெனுங் கருத்தே
— (இராமாயணம்)

சீத ராவுமை சோத ராவெம தீத ராவர நாமதா
மோத ராவண மாலை சூடு முகுந்த ராச சகுந்தமூர்
நாத ராவண னைக்க டிந்திடு நார ணாதழ லுறுகட்
காத ராவணை மீது கண்டுயில் கண்ண னேகடல் வண்ணனே.

அச்சு தாமுக மச்சு தாகர னன்ன கோதை யசோதைதன்
கச்சு லாமுலை யுண்டு பண்டவள் கைய ணைத்துயில் கொண்டிடு
மெய்ச்சு தாபசு மைச்சு வாசக மென்மொ ழித்திரு நாயகா
நச்சு வாயர வுச்சி மீது நடத்தி டும்பத நளினனே.

கேச வாவயி ரோச னற்கெதிர் கிட்டி மூவடி மண்கொளும்
யாச காநர சிங்க மாய்முத லிரணி யற்றெறு முரணினோய்
வாச வாரிச லோச னாமயில் வாசி யூர்குகன் மாதுலா
தேசி னுலுயர் தேவ கிக்கொரு செம்ம லாய்வரு செம்மலே.
—(ஏகாதசிப் புராணம்.)

---

வெளியீடு : அறிவு வளர்ச்சிக் கழகம், பொன்னாலை.
தொகுப்பாசிரியர் : பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்.

# நன்றி

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் ஆலயத்தில் பள்ளி கொண்டருளியிருக்கும் ஸ்ரீ அனந்த சயனப் பெருமானது மகா கும்பாபிஷேக விழாவையொட்டி மலர் ஒன்று வெளியிட எண்ணினோம்.

திருவருட்துணையும், அன்பர்களின் பேராதரவும் கிடைக்கவே, எண்ணித் துணிந்து செயலில் இறங்கினோம்.

எமது கழகத்தைச் சேர்ந்த பண்டிதர் திரு. தி. பொன்னம்பலவாணர் மலரைத் தொகுத்து வெளியிடும் பணியைப் பொறுப்பேற்று, பல அறிஞர்களிடமும் கட்டுரைகளைப் பெற்று மலரை உருவாக்கித் தந்துள்ளார். அவருக்கும், அவர் கேட்டதற்கிணங்கி அரிய கட்டுரைகளைத் தந்துதவிய அறிஞர்களுக்கும்,

மலரைச் சிறப்புற வெளியிடுவதற்கு வேண்டிய பொருளுதவி புரிந்த அபிமானிகளான திருவாளர்கள் ம. இ. சுப்பிரமணியம், நா. முருகேசு (மூளாய்), அ. செல்லையா, எஸ் எஸ் சின்னையா, அ நாகராசா (தொல்புரம்), சோ ஏ. ஞானப்பிரகாசம் (தொல்புரம்), பிரம்ம ஸ்ரீ ச. வரதராஜக் குருக்கள் முதலான பல அன்பர்களுக்கும்,

மிகச் சுருங்கிய காலத்தில் மிக நேர்த்தியாக மலரை அச்சிட்டுத் தந்த யாழ்ப்பாணம் ஆனந்தா அச்சகத்தினருக்கும்,

எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவர்கள் அனைவருக்கும், இம்மலரை வாங்கிப் படிக்கும் அன்பர்களுக்கும் ஸ்ரீ அனந்த சயனப் பெருமானின் திருவருள் என்றென்றும் நிறைவதாக என்று வேண்டுகின்றோம்.

பொன்னாலை,
27-1-71.

— அறிவு வளர்ச்சிக் கழகம்

ஸ்ரீ ராம ஜெயம்

பொன்னலை

# ஸ்ரீ அனந்தசயனப் பெருமாள் திருவடிகளுக்கு

# எனது அஞ்சலி



ம. இ. சுப்பிரமணியம்
பிரபல வர்த்தகர்
91, 93, டீன்ஸ் றோட், மருதானை.

அச்சுப் பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.